[12th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹோம் மினிஸ்டர் என்ன செய்தார்கள் என்பதெல்லாம் இந்தக் கேள்வியில் எழவில்லை.

திரு. செ. மாதவன் : உள்துறை அமைச்சர் விசாரித்தார்களா ? அப்படி விசாரித்ததில் உண்மைகள் புலப்பட்டனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உள்துறை அமைச்சர் விசாரிப்பதற்குப் போகவில்லை. சட்டப்படி ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் தான் என்கொயரி நடத்தினர்.

பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப்பள்ளி (புதுக்கோட்டை)

* 215 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டையில் பெண்களுக்குத் தனியாக ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஒன்று ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. பி. முருகையன் : தாராபுரத்திலும், தஞ்சையிலும் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பயிற்சிப்பள்ளிகளில் சேருவதற்கு இட நெருக்கடி காரணமாக அதிகமாக மாணவிகளைச் சேர்ப்பதற்கில்லை. ஆகையால் புதுக்கோட்டையில் பெண்கள் ஆசிரியர்கள் பயிற்சிப்பள்ளி ஏற்படுத்த இனிமேலாவது அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெண்கள் பயிற்சிப்பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு பேர்கள் தேவையோ அந்த அளவிற்குத்தான் பள்ளிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது வேறு அமைப்பதற்கு உத்தேசம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியிலே ஓரளவிற்கு நல்லவிதமாகப் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள் என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே ஆண்கள் பயிற்சிப்பள்ளிகளைவிட பெண்கள் பயிற்சிப்பள்ளிகளை அதிகமாக அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆண்கள் பயிற்சிப்பள்ளிகளும் பெண்கள் பயிற்சிப்பள்ளிகளும் எந்த அளவுக்கு வேண்டியிருக்கிறதோ அந்த அளவிற்குப் போதிய பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

Super Power Grid for south

* 216 *Q.*—SRI M. KALYANASUNDARAM : } Will the Hon.
SRI K. A. MATHIALAGAN : }
the Minister for Industries be pleased to state—

(*a*) whether a copy of the recommendations made at the Conference convened by the Union Minister for Irrigation and Power at Bangalore in October 1963 on the establishment of a Super Power Grid for the south has been received; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Southern Regional Electricity Board has been inaugurated on the 10th July 1964 and is functioning at Bangalore with a Member-Secretary.